2021 பிப்ரவரி 26] [திரு. ஆர். நடராஜ்]

அம்மா அவர்கள் போதித்த ஒழுக்கத்தைப் பின்பற்றி சிறப்பாகப் பணியாற்றிய மாண்புமிகு கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) 'வெளி நடப்பே வழி நடப்பாய்' பயின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் இதயமார்ந்த வாழ்த்துகளை உரித்தாக்குகின்றேன்.

கடந்த ஐந்து வருடம் அசாதாரண சூழ்நிலையைச் சந்தித்தோம். முதல் வருடம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை இழந்தோம். கடந்த ஒரு வருடம் கொரோனா நோய்த் தொற்றிலிருந்து மக்களைக் காப்பாற்ற 'உழைத்தோம், வெற்றி கண்டோம்'. மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் ஆசியோடு மீண்டும் போட்டியிட எல்லோருக்கும் அளிக்கப்படும் வாய்ப்போடு, மக்களின் ஆதரவு பெற்று, பெரும்பான்மை பலத்தோடு 16–வது சட்டமன்றப் பேரவையில் மீண்டும் சந்திப்போம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் 2018–2021 ஆம் ஆண்டுகளுக்கான 172 முதல் 186 வரையிலான 15 அறிக்கைகளை பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்களின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

பொதுக் கணக்குக் குழுவின் விவாதங்களுக்கு பெரும் உதவியாக இருந்த சட்டமன்றப் பேரவைச் செயலாளர் திரு. கி. சீனிவாசன் மற்றும் சட்டமன்றப் பேரவைச் செயலகத்தின் ஆற்றல்மிக்க அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு திரு. S. செம்மலை, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.

***திரு. S. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2018 முதல் 2021 ஆம் ஆண்டுகளுக்கான பொது நிறுவனங்கள் குழுவின் 137 முதல் 154 வரையிலான 18 அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

[திரு. S. செம்மலை] [2021 பிப்ரவரி 26

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் 2018 முதல் 2021 வரையிலான காலக்கட்டத்தில் மொத்தம் 90 அறிக்கைகளை பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக அதன் தலைவர் என்ற முறையில் பேரவைக்கு அளித்ததில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். பொதுவாக ஓராண்டுக்குத்தான் ஒரு குழுவினுடைய பதவிக் காலம் இருக்கும். ஆனால், மாண்புமிகு பேரவைத் தலைவராகிய நீங்கள், நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் பரிந்துரையின் பேரில் இதனை மூன்றாண்டுகளுக்கு நீட்டிக் கொடுத்து, எங்களுக்கு நல்ல அனுபவம் ஏற்படுகின்ற வகையில் ஒரு வாய்ப்பினை அளித்ததற்கு குழுவின் தலைவர் என்ற முறையிலும், குழு உறுப்பினர்கள் சார்பிலும் எங்களுடைய நன்றியினை உங்களுக்கு பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பொதுவாக, கடந்த மூன்று ஆண்டுகளில் நாங்கள் 90 அறிக்கைகளை அளித்ததில் மகிழ்ச்சியடைந்தாலும், கொரோனா தொற்றின் காரணமாக ஓராண்டுக் காலம் நாங்கள் களப் பணியாற்றிடவும், எங்களால் தன்னாய்வுக்கு எடுத்துக்கொண்ட துறைகளை முழுமையாக முடிப்பதற்கு வாய்ப்பு இல்லாமலும் போய்விட்ட காரணத்தினால் எங்களால் இன்னும் அதிக அறிக்கைகளை இந்தப் பேரவைக்கு சமர்ப்பித்திருக்க இயலும். அந்தவகையில் அது ஒரு குறையாக எங்களுக்கு இருந்தாலும், 90 அறிக்கைகளை அளித்ததில் மன நிறைவுகொள்கிறோம். இந்த அறிக்கைகளை அளித்ததில் எங்களுக்கு ஒரு வழிகாட்டியாக, இன்னும் சொல்லப்போனால் எனக்கு இதற்குமுன் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவராக இருந்த அனுபவம் இருக்கின்றது. அதுபோல் மற்ற குழுக்களில் பணியாற்றியிருக்கின்ற அந்த அனுபவம் இருக்கிறது. இருந்தாலும், இந்தக் குழுவில் இருக்கக்கூடிய புதிய உறுப்பினர்கள், நல்லமுறையில் இந்த அலுவல்களை தெரிந்துகொள்ளும் வகையில், இந்தப் பணிகளில் மிகுந்த ஒத்துழைப்பு எங்களுக்கு நல்கியவர், நமது சட்டமன்றப் பேரவைச் செயலாளர் என்று சொன்னால் அது மிகையாகாது. அவர் எங்களுக்கு சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்தார். அதுபோல், தணிக்கைத் துறை சார்பில் குறைகள் சுட்டிக்காட்டப்பட்டு, அந்தக் குறைகளை consolidate செய்து, துறைகளுக்கு அனுப்பி அரசுச் செயலாளர்கள், துறைத்

2021 பிப்ரவரி 26] [திரு. S. செம்மலை]

தலைவர்களையெல்லாம் அழைத்து, சாட்சியங்களை பதியவைத்து, அந்தக் குறைகளையெல்லாம் நிவர்த்தி செய்து, குறிப்பாக இந்தக் குழு சிறப்பாகச் செயல்படுவதற்கு முழு ஒத்துழைப்பை நல்கிய நமது குழுவினுடைய அலுவலர்களுக்கும் இந்த நேரத்தில் நான் நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

கடந்த மூன்றாண்டுக் காலத்தில் தன்னாய்வுக்கு 4 துறைகளை நாங்கள் எடுத்துக்கொண்டோம். கள ஆய்வு செய்து, அதுகுறித்த அறிக்கைகளை எங்களால் பேரவைக்கு சமர்ப்பிக்க முடிந்தது. அந்தவகையில் குழு உறுப்பினர்களுக்கு ஒரு நல்ல அனுபவம் ஏற்பட்டிருக்கின்றது. அந்த அனுபவத்திற்கு முழு காரணம் நிச்சயமாக நமது பேரவைச் செயலாளர் திரு. சீனிவாசன் என்று சொன்னால் அது மிகையாகாது. அதுபோல் இந்தக் குழுவின் அலுவலர் திரு. B. ரவிச்சந்திரன் அவர்களும், அவரோடு இணைந்து பணியாற்றிய குழுவின் அலுவலர்களும் எங்களுக்கு முழு ஒத்துழைப்பைக் கொடுத்த காரணத்தினால்தான், எங்களால் சிறப்பாகச் செயல்பட முடிந்தது.

நண்பகல் 12–00

அதுமட்டுமல்ல, 3 ஆண்டுகள் தொடர்ந்து என்னை இந்தக் குழுவின் தலைவராக நியமித்ததற்கு மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவராகிய தங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகிய இருபெரும் தலைவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன். நன்றி.

(ஈ) சட்டவிதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதப் புனிதர், மாணிக்கத் தலைவன், தன் வாழ்நாளில் சம்பாதித்த சொத்துக்களையெல்லாம் காது கேளாதவர்களுக்கும், கண் தெரியாதவர்களுக்கும், வாய் பேசாதவர்களுக்கும், முதியோர்களுக்கும், ஆதரவற்றோர்களுக்கும் வாரிவாரி வழங்கி, வங்கக் கடலோரம் உறங்கிக் கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். எனக்குப் பின்னாலும்*